மும்பை விழாவில்

3 அதி நவீன போர்க்கப்பல்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார் பிரதமர் மோடி

மும்பை, ஜன.16

மும்பையில் நடந்த விழாவில் ஒரேநாளில் 3 அதிநவீன போர்க்கப்பல்களை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது, இந்தியா மிகப்பெரிய கடல்சார் சக்தியாக உருவெடுத்து வருவதாக பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

உலக அளவில் வல்லமைமிக்க இந்திய கடற்படையை உறுதிசெய்யும் வகையில் அதிநவீன போர்க்கப்பல்கள் கடற்படையில் சேர்க்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்திய கடற்படையை மேலும் வலுசேர்க்கும் விதமாக புதிதாக 3 போர்க்கப்பல்கள் கட்டப்பட்டன. ஐ.என்.எஸ். சூரத், ஐ.என்.எஸ். நீலகிரி, ஐ.என்.எஸ். வாக்ஷீர் என்று பெயரிடப்பட்ட 3 போர்க்கப்பல்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் பிரமாண்ட விழா நேற்று மும்பை கப்பல் கட்டும் தளத்தில் நடந்தது.

இதற்காக மும்பை வந்த பிரதமர் நரேந்திர மோடி விழா நடைபெறும் இடத்துக்கு வந்தார். அவரை கடற்படை அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர் பிரதமர் மோடி ஐ.என். எஸ். சூரத், ஐ.என்.எஸ். நீலகிரி, ஐ.என்.எஸ்., வாக்ஷீர் ஆகிய 3 போர்க்கப்பல்களை முறைப்படி கடற்படையில் சேர்த்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். இதில் ஒன்று வல்லமைமிக்க ஏவுகணை அழிப்பு கப்பல் ஆகும். மற்றொன்று அதிநவீன போர்க்கப்பல். இன்னொன்று நீர்மூழ்கி போர்க்கப்பல் ஆகும்.

இப்படி சிறப்புமிக்க 3 போர்க்கப்பல்கள் ஒரே நேரத்தில் கடற்படையில் இணைப்பது இதுவே முதல்முறையாகும். இந்த 3 கப்பல்களும் இந்தியாவில் உருவாக்கப்பட்டவை என்பது மற்றொரு பெருமைக்குரிய விஷயமாகும்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், கடற்படை தளபதி தினேஷ் திரிபாதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இந்தியா மிகப்பெரிய கடல்சார் சக்தியாக உருவெடுத்து வருகிறது. போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் பயங்கரவாதத்தில் இருந்து கடலை பாதுகாப்பதிலும், அதை பாதுகாப்பாகவும் வளமாகவும் மாற்றுவதிலும் நாம் உலகளாவிய பங்காளியாக மாற வேண்டும்.

இந்தியா உலகின் முக்கிய கடல்சார் வல்லரசாக வளர்ந்து வருகிறது. மேலும் அது ஒரு நம்பகமான மற்றும் பொறுப்பான கூட்டாளியாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. இந்திய பெருங்கடல் பகுதியில் முதல் பொறுப்பாளியாக இந்தியா உருவெடுத்துள்ளது.

உலக பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் இயக்கவியலுக்கு வழிகாட்டுவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க போகிறது. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் சுதந்திரம், பாதுகாப்பான வர்த்தக வினியோகம் மற்றும் கடல் வழிகளை பாதுகாப்பது முக்கியம். இந்தியா விரிவுபடுத்திக்கொள்வதற்காக இல்லாமல், வளர்ச்சிக்காக பாடுபடுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 33 கப்பல்கள் மற்றும் 7 நீர்மூழ்கி கப்பல்கள் கடற்படையில் சேர்க்கப்பட்டு உள்ளன. இந்தியாவில் பாதுகாப்பு உபகரண உற்பத்தியின் மதிப்பு ரூ.1.25 லட்சம் கோடியை தாண்டி உள்ளது. 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

அய்யன் திருவள்ளுவர் விருது
மற்றும்
தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி
விருதுகள் வழங்குபவர்

சென்னை தலைமைச் செயலகத்தில் திருவள்ளுவர் தினத்தையொட்டி தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பெருந்தலைவர் காமராசர் விருதை காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலுவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சாமிநாதன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் உள்ளனர்.

திருவள்ளுவர் தினத்தில் தமிழ் அறிஞர்களுக்கு விருது: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஜன.16–

திருவள்ளுவர் தினத்தையொட்டி தமிழ் அறிஞர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விருதுகளை வழங்கினார்.

தமிழ்ப்புலவர்களையும், தமிழ் அறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் தை மாதம் 2ம் நாளை திருவள்ளுவர் திருநாள் எனக் கடைப்பிடிக்க மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆணையிட்டார். தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசும், தமிழ் அறிஞர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் சிறப்பித்து வருகிறது.

அந்த வகையில் தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 2025ம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது, புலவர் மு.படிக்கராமுக்கும்; 2024ம் ஆண்டுக்கான பேறறிஞர் அண்ணா விருது எல்.கணேசனுக்கும்; பெருந்தலைவர் காமராசர் விருது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான கே.வி. தங்கபாலுக்கும்; மகாகவி பாரதியார் விருது கவிஞர் கபிலனுக்கும்;

பாவேந்தர் பாரதிதாசன் விருது பொன்.செல்வகணபதிக்கும்; தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத்திற்கும்; முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது வே.மு. பொதியவெற்பனுக்கும் நேற்று திருவள்ளுவர் திருநாளையொட்டி தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தலா ரூ.2 லட்சத்திற்கான காசோலை, ஒரு பவுன் தங்கப் பதக்கம், தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2024ம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது விடுதலை ராஜேந்திரனுக்கும்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2024ம் ஆண்டிற்கான அண்ணல் அம்பேத்கர் விருது விடுதலைச்சிறுத்தைகள் கட்சி எம்.பி. ரவிக்குமாருக்கும் முதலமைச்சர் வழங்கினார். இந்த விருதுடன் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக தலா ரூ.5 லட்சம், ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் விருது 2024ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, முதன் முறையாக முத்து வாவாசிக்கு வழங்கப்பட்டு உள்ளது. அவருக்கு அந்த விருதுடன், விருதுத் தொகையாக ரூ.10 லட்சம், ஒரு பவுன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து முதலமைச்சர் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் சாமிநாதன், மெய்யநாதன், மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் விஜயராஜ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் அருள் கலந்துகொண்டனர்.

ஒத்திவைக்கப்பட்ட யு.ஜி.சி. நெட் தேர்வு: 21, 27ந் தேதி நடக்கிறது

சென்னை, ஜன.16

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசிரியர் பணிக்கான தகுதித் தேர்வாகவும், இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கான தகுதித் தேர்வுக்காகவும், பி.எச்டி படிப்புக்கான தகுதித் தேர்வாகவும் 'யு.ஜி.சி. நெட்' தகுதித் தேர்வு நடத்தப்படுகிறது. 2024 டிசம்பர் மாதத்துக்கான யு.ஜி.சி நெட் தேர்வு, கடந்த ஜனவரி 3ந்தேதி தொடங்கி இன்றுடன் நிறைவடைகிறது.

இந்த சூழலில், ஜனவரி 15ந்தேதி (நேற்று) நடைபெற இருந்த தேர்வு, பொங்கல் பண்டிகை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், ஒத்திவைக்கப்பட்ட யு.ஜி.சி. நெட் தேர்வுக்கான தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், ஒத்திவைக்கப்பட்ட நெட் தேர்வு வருகிற 21 மற்றும் 27ந்தேதிகளில் நடைபெறுகிறது. 21ந்தேதி காலையிலும், 27ந்தேதி மாலையிலும் தேர்வானது நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

3ம் ஆண்டு காசி தமிழ்ச் சங்கமம்: அடுத்த மாதம் 15ந்தேதி தொடங்குகிறது

இணையதளம் மூலம் முன்பதிவு செய்யலாம்

புதுடெல்லி, ஜன.16–

3ம் ஆண்டு காசி தமிழ் சங்கமம் அடுத்த மாதம் (பிப்ரவரி) 15ந்தேதி தொடங்குகிறது. இதில் பங்கேற்க இணையதளம் மூலம் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

தமிழ்நாட்டுக்கும், காசிக்கும் இடையே உள்ள பழங்கால தொடர்பை புதுப்பிக்கும் வகையில் காசி தமிழ் சங்கமம் என்ற கலாசார பரிமாற்ற விழாவை மத்திய அரசு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. இது தமிழ்நாடு மற்றும் உத்தரபிரதேச மாநில மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.

இதனைத் தொடர்ந்து 3ம் ஆண்டு தமிழ் சங்கமத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த நிகழ்ச்சி அடுத்த மாதம் (பிப்ரவரி) 15 ந்தேதி தொடங்கி 24ந்தேதி வரை 10 நாட்கள் நடக்கிறது.

இதுதொடர்பாக மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் டெல்லியில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், தமிழ் சங்கம முன்பதிவுக்கான இணையதளத்தை அவர் தொடங்கி வைத்தார். சென்னை ஐ.ஐ.டி.யின் *kashitamil.iitm.ac.in* என்ற இணையதளத்தில், பிப்ரவரி 1ந்தேதி வரை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

மேலும் பேசிய அவர், “தமிழகம் காசி இடையேயான பிரிக்க முடியாத பிணைப்பு, காசி தமிழ்ச்சங்கமம் 3ம் கட்டத்தின் மூலம் மீண்டும் உயிர்ப்பெறும். பிரதமர் மோடியின் சிந்தனையில் உதித்த இந்த சங்கமம், நாகரிக தொடர்புகளை வலுப்படுத்தவும், ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற உணர்வை மேம்படுத்தவும் உத்வேகம் அளிப்பதற்கான முயற்சியாகும். இந்த ஆண்டு, மகா கும்பமேளா நிகழ்ச்சியுடன் காசி தமிழ் சங்கமம் ஒருசேர நடைபெறுவது தனிச்சிறப்பு. அத்துடன் அயோத்தியில் ராமர்சிலை பிரதிஷ்டைக்கு பிறகு நடைபெறும் முதல் சங்கம நிகழ்ச்சி என்பதும் சிறப்பு. எனவே, தமிழக மக்கள் முழு அளவில் இதில் பங்கேற்க வேண்டும்” என கேட்டுக்கொண்டார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி

ஈரோடு, ஜன.16–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிவிக்கப்பட்டு உள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந்தேதி நடக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 10ந்தேதி தொடங்கியது. இதுவரை 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த இடைத்தேர்தலை அ.தி.மு.க., பா.ஜனதா, தே.மு.தி.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புறக்கணித்து உள்ளன. தி.மு.க. சார்பில் வி.சி.சந்திரகுமார் போட்டியிடுகிறார். அதே நேரத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளராக கி.சீதாலட்சுமி (வயது 50) போட்டியிடுவார் என்று சீமான் அறிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கி.சீதாலட்சுமியின் வாழ்க்கை குறிப்பு வருமாறு:– வேட்பாளர் கி.சீதாலட்சுமியின் சொந்த ஊர் கோபி அருகே உள்ள மாரப்பம்பாளையம் ஆகும். இவர் எம்.ஏ., எம்.பில். படித்துவிட்டு கடந்த 13 ஆண்டுகளாக ஆசிரியராக பணியாற்றி வந்தார். அதன் பின்னர் ஆசிரியர் பணியை விட்டுவிட்டு நாம் தமிழர் கட்சியில் சேர்ந்து கட்சி பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். மேலும் விவசாயம் செய்து வரும் அவர் கேபிள் டி.வி. ஆபரேட்டராகவும் உள்ளார்.

தற்போது சீதாலட்சுமி நாம் தமிழர் கட்சி மகளிர் பாசறையின் மாநில ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வருகிறார். இவர் கடந்த 2016ம் ஆண்டு பவானி சட்டசபை தொகுதியிலும், 2019ம் ஆண்டு ஈரோடு நாடாளுமன்ற தொகுதியிலும், 2020ம் ஆண்டு பவானி பகுதியில் மாவட்ட ஊராட்சி கவுன்சிலருக்கும், 2021ம் ஆண்டு கோபி சட்டமன்ற தொகுதியிலும், 2024ம் ஆண்டு திருப்பூர் நாடாளுமன்ற தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். தற்போது 6வது தேர்தலாக வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

---

kotak Kotak Mahindra Bank **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் அருகில்)

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ– ஏல விற்பனை அறிவிப்பு

பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 13.08.2024 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனிமேல் "வங்கி/கேஎம்பிஎல்/ஈடுபெற்ற கடன் வழங்கியவர்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/OMR/0618/543948–ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு. ராஜசேகர் பிள்ளை கே & திருமதி. ஷோபனா ஜே** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 10.01.2025 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.2,03,17,728/–(ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்'' வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	25.02.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	**சொத்து எண்.1க்கு ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்)** **சொத்து எண்.2 க்கு ரூ.48,07,000/– (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து ஏழாயிரம் மட்டும்)**
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	**சொத்து எண்.1ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)** **சொத்து எண்.2ரூ.4,80,700/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தாயிரத்து எழுநூறு மட்டும்)**
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	24.02.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற சொத்துகள் குறித்த விவரம்: **சொத்து எண்.1:** அட்டவணை ‘‘ஏ’’. நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்கள். 4 முதல் 8 வரை மற்றும் கடை விஸ்தீரணம் 13,492 சதுர அடி நிலம், பழைய சர்வே எண்.37/2B, புதிய சர்வே எண்.37/2A, 05.06.2015 தேதியிட்ட MLPA அங்கீகாரம். நா.கா.எண்.1031/2014, திட்டமிடல் அனுமதி எண்.10/2015, எண்.13, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்: வடக்கு: பூங்கா, தெற்கு: சர்வே எண்.37/2B1, கிழக்கு: சர்வே எண்.36, மேற்கு: 30 அடி சாலை, திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை ‘‘பி’’: நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். அட்டவணை ஏ–ல் குறிப்பிட்டுள்ள (13,492 சதுர அடி நிலம்) நிலத்தில் 8680 சதுர அடி நிலம். பழைய சர்வே எண்.37/2பி, புதிய சர்வே எண்.37/2ஏ, எண்.13, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது, கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

S.No.	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	Total
Plot No.	Shop	4-A	4-B	5-A	6-A	6-B	6-C	6-D	Passage	7-B	7-C	7-D	
Extent (in sq.ft.)	560	750	750	721	692	706	631	743	1179	652	652	644	8680

இந்த சொத்தானது திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை ‘‘சி’’: நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.4A, வில்லா எண்.1–ல் உள்ள 750 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் பில்டப் ஏரியா 1610 சதுர அடி. அட்டவணை ‘‘பி’’–ல் குறிப்பிட்டுள்ள சொத்து. புதிய சர்வே எண்.37/2ஏ, பழைய சர்வே எண்.37/2பி, எண்.13 இல் அமைந்துள்ளது, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பக்கத்தில்: 31'3”, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பக்கத்தில்: 31'3”, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 24'0”, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 24'0”. எல்லைகள் : வடக்கு: பூங்கா, தெற்கு: சாலை, கிழக்கு: சர்வே எண்.37/2A இல் மனை எண்.4B, மேற்கு: சர்வே எண்.37/2Aல் கடை மனை. இந்த சொத்து திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் உள்ளது. அடமானம் வைத்தவரின் பெயர்: திருமதி. ஷோபனா ஜே. **சொத்து எண்.2:** அட்டவணை ‘‘ஏ’’. நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்கள். 4 முதல் 8 வரை மற்றும் கடை விஸ்தீரணம் 13,492 சதுர அடி நிலம், பழைய சர்வே எண்.37/2B, புதிய சர்வே எண்.37/2A, 05.06.2015 தேதியிட்ட MLPA அங்கீகாரம். நா.கா.எண்.1031/2014, திட்டமிடல் அனுமதி எண்.10/2015, எண்.13, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்: வடக்கு: பூங்கா, தெற்கு: சர்வே எண்.37/2B1, கிழக்கு: சர்வே எண்.36, மேற்கு: 30 அடி சாலை, திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை ‘‘பி’’: நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். அட்டவணை ஏ–ல் குறிப்பிட்டுள்ள (13,492 சதுர அடி நிலம்) நிலத்தில் 8680 சதுர அடி நிலம். பழைய சர்வே எண்.37/2பி, புதிய சர்வே எண்.37/2ஏ, எண்.13, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது, கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

S.No.	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	Total
Plot No.	Shop	4-A	4-B	5-A	6-A	6-B	6-C	6-D	Passage	7-B	7-C	7-D	
Extent (in sq.ft.)	560	750	750	721	692	706	631	743	1179	652	652	644	8680

இந்த சொத்தானது திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை ‘‘சி’’: நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.5A, வில்லா எண்.3–ல் உள்ள 721 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் பில்டப் ஏரியா 1545 சதுர அடி. அட்டவணை ‘‘பி’’–ல் குறிப்பிட்டுள்ள சொத்து. புதிய சர்வே எண்.37/2ஏ, பழைய சர்வே எண்.37/2பி, எண்.13 இல் அமைந்துள்ளது, சிறுசேரி கிராமம், திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பக்கத்தில்: 31'4 1/2”, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பக்கத்தில்: 31'4 1/2", கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 23'0”, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 23'0”. எல்லைகள் : வடக்கு: பூங்கா, தெற்கு: சாலை, கிழக்கு: சர்வே எண்.37/2A–ல் மனை எண்.5B, மேற்கு: சர்வே எண்.37/2A–ல் மனை எண்.4B. இந்த சொத்து திருப்போரூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் உள்ளது.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. சூரிய நாராயணன் பி (மொபைல் எண். +919600222111) & திரு. விஷால் ஆதிஷேஷன் (மொபைல் எண் +919941016600)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR **எண் (+91 9152219751)**ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 15.01.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

---

kotak Kotak Mahindra Bank **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051. கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: இந்தியா கரேஜ் மஹிந்திரா கார் ஷோரூம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ– ஏல விற்பனை அறிவிப்பு. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 20.02.2022 அன்று பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி “பிஎன்பிஎச்எப்எல்” என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.00116740003395ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு பத்மநாபன் வைதீஸ்வரன் & திருமதி வி.காஞ்சனா** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 09.01.2025 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.2,20,30,967/– (ரூபாய் இரண்டு கோடியே இருபது லட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தேழு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்'' வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	24.02.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	**ரூ.1,08,00,000/-** (ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	**ரூ.10,80,000/-** (ரூபாய் பத்து லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	21.02.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், காலி வீட்டு மனை. 'ஐடி நெடுஞ்சாலை கூட்டுறவு நகர்' லேஅவுட்டின் ஒரு பகுதியாக மனை எண். 286, 287, 288, 289, 290, 291, டி.டி.சி.பி அங்கீகார திட்ட எண். 6/2011, தையூர் கிராமம், முன்பு செங்கல்பட்டு தாலுகா, தற்போது திருப்போரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண்கள். 909/2 மற்றும் 911/2. மனை எண். 286ன் எல்லைகள் : வடக்கு: மனை எண்.283, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 285, மேற்கு: மனை எண். 287. மனை எண். 286ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண்.287, எல்லைகள் : வடக்கு: மனை எண்.282, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 286, மேற்கு: மனை எண். 288. மனை எண். 287ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண்.288, எல்லைகள் : வடக்கு: மனை எண்.281, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 287, மேற்கு: மனை எண். 289. மனை எண். 288ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண்.289, எல்லைகள் : வடக்கு: மனை எண்.280, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 288, மேற்கு: மனை எண். 290. மனை எண். 289ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண்.290, எல்லைகள் : வடக்கு: மனை எண்.279, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 289, மேற்கு: மனை எண். 291. மனை எண். 290ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண்.291, எல்லைகள் : வடக்கு: மனை எண்.278, தெற்கு: 30 அடி அகல சாலை, கிழக்கு: மனை எண். 290, மேற்கு: மனை எண். 292. மனை எண். 291ன் விஸ்தீரணம்: வடக்கிலிருந்து தெற்கே கிழக்குப் பகுதியில்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்குப் பகுதியில்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி, மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி. மனை எண். 286, 287, 288, 289, 290, 291 என மொத்தம் விஸ்தீரணம் 10800 சதுர அடி. இந்த சொத்தானது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. சூரிய நாராயணன் பி (+91 9600222111) மற்றும் திரு. விஷால் ஆதிசேஷன்** (மொபைல் எண். +9199410146600). தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : காஞ்சிபுரம், சென்னை
தேதி: 16.01.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **30 ஜனவரி, 2025** அன்று மாலை 03:00 **மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை /கணவன் பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
1	சென்னை	104142510986	ராஜ்குமார் ஜே	S/o. ஜானகிராமன்	21 33,84வது தெரு 13வது பிரிவு சிவலிங்கபுரம் கே.கே.நகர்,கலைஞர் கருணாநிதி நகர் சென்னை தமிழ்நாடு 600078	08-08-2024	210962.47
2	சென்னை	104142510334	கே தினேஷ்	S/o. கருப்பத்தேவன்	1 17 வேம்புலி அம்மன் கோவில், தெரு விரிவு பிருந்தாவன் நகர், பழவந்தாங்கல் காஞ்சிபுரம் தமிழ்நாடு 600114	05-03-2024	83134.97
3	சென்னை	104142510704	ஆர் நாராயணன்	S/o. ராமு	29 மற்றும் 52 ஏ பிளாக் F2 மனை விசோகா, அஸ்வினி பிளாட் மேற்கு இந்திரா நகர் 5வது தெரு , காட்டுப்பாக்கம் திருவள்ளூர் தமிழ்நாடு 600056	31-05-2024	142074.63
4	சென்னை	104142510967	மாலதி கே	C/O குமரேசன் ஏ	எண் 3 456 தரை தளம் 25வது, தெரு என்எஸ்கே நகர் அரும்பாக்கம் சென்னை தமிழ்நாடு 600106	02-08-2024	254754.66
5	சென்னை	104142510341	அலெக்சாண்டர் எம்	S/o. மரியாரோக்	0 N 5 N N 9 (பிளாக் C), வள்ளலார் தெரு MMDA அரும்பாக்கம், சென்னை தமிழ்நாடு 600106	06-03-2024	106169.19
6	சென்னை	104142510553	ஆர் பிரேமா	S/o. ராஜன்	9/4, சோலை 2வது தெரு அயனாபுரம் அயனாவரம், சென்னை தமிழ்நாடு 600023	25-04-2024	67607.10
7	சென்னை	104142510855	சாய்ராம் டி	S/o. கிருஷ்ணையா	98, மகாத்மா காந்தி தெரு ராஜீவ் காந்தி நகர் ஆலப்பாக்கம் போரூர் திருவள்ளூர் சென்னை தமிழ்நாடு 600116	05-07-2024	471436.08
8	சென்னை	104142511003	வைசாலி எஸ்	S/o. செல்வராஜ்	எண் 3/5, இளங்கோ தெரு விவேகானந்த நகர் கொடுங்கையூர் சென்னை தமிழ்நாடு 600118	13-08-2024	121318.21
9	சென்னை	104142511005	முகேஷ்ராஜா கென்னடி	S/o. கென்னடி	54, ஜி என் செட்டி தெரு மைலாப்பூர், சென்னை தமிழ்நாடு 600004	13-08-2024	177439.91
10	சென்னை	104142511008	கே சதீஷ்	S/o. குமார்	எண்.15/7, 14வது தெரு, டான்சி நகர், வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600042	13-08-2024	139282.24

ஏல தேதி 30 ஜனவரி, 2025 அன்று மாலை 03.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

சாயாஜி ஹோட்டல்ஸ் (புனே) லிமிடெட்

பதிவு அலுவலகம்: எப்1, சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், கீழ்கட்டளை, காஞ்சிபுரம், தாம்பரம், சென்னை, தமிழ்நாடு 600117, இந்தியா, Tel. No. : 044-29871174 I Email Id : cs@shplpune.com I Website : www.shplpune.com | CIN:L55204TN2018P LC122599

டிசம்பர் 31, 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

வ. எண்.	விவரங்கள்	தனியானது				ஒருங்கிணைந்தது			
		முடிந்த காலாண்டு		முடிந்த 9 மாதங்கள்	முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த 9 மாதங்கள்	முடிந்த ஆண்டு
		31.12.2024	31.12.2023	31.12.2024	31.03.2024	31.12.2024	31.12.2023	31.12.2024	31.03.2024
		(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்)	2,137.63	1,920.71	5,720.90	7,128.42	2,119.81	19,201.71	5,693.29	7,128.42
2	காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	733.11	652.51	1,824.81	2,193.74	714.98	649.58	1,796.15	2,179.49
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	733.11	652.51	1,824.81	2,193.74	714.98	649.58	1,796.15	2,179.49
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	558.66	496.61	1,357.88	1,663.68	545.24	494.23	1,329.59	1,657.55
5	காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	555.48	496.27	1,348.33	1,658.07	542.06	493.89	1,320.04	1,651.94
6	சமபங்கு மூலதனம்	304.66	304.66	304.66	304.66	304.66	304.66	304.66	304.66
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.	-	-	-	-	-	-	-	-
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)								
	அடிப்படை	18.34	16.30	44.57	54.61	17.89	16.22	43.64	54.41
	டைலூடட்	18.34	16.30	44.57	54.61	17.89	16.22	43.64	54.41

குறிப்பு

அ. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் இன்றைய தேதி வரையிலான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் இன்றைய தேதி வரையிலான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (www.shplpune.com)ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் (புனே) லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
அபய் சிந்தாமன் சௌதாரி
சேர்மன்

இடம்: இந்தூர்
தேதி: 14.01.2025